செய்தி வெளியீடு எண்.28-2016 நாள்: 13.06.2016

# விழுப்புரம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தவர்களுக்கு டாப்செட்கோ கடன் திட்டத்தின்கீழ் கடனுதவிபெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் அறிவிப்பு.

*****

தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தும் நோக்குடன் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் பல்வேறு திட்டங்களின் கீழ் கடனுதவி வழங்கி வருகிறது.

1. **<u>பொது காலக்கடன் திட்டம் / தனிநபர் கடன் திட்டம்</u>**

இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ.10.00 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் கடன்களுக்கு 6% முதல் 8% வட்டி வசூலிக்கப்படுகிறது. கடன் தொகையை 3 முதல் 5 ஆண்டுகளுக்குள் திரும்ப செலுத்த வேண்டும்.

2. **<u>பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டம்</u>**

இத்திட்டம் பெண்களின் சுயசார்பு நிலையினை வலியுறுத்தும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ.1.00 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் கடன்களுக்கு 5% வட்டி வசூலிக்கப்படுகிறது. கடன் தொகையை 3 முதல் 5 ஆண்டுகளுக்குள் திரும்ப செலுத்த வேண்டும்.

3. **<u>மகிளா சம்ரிதி யோஜனா</u>**

தொழில் முனையும் பெண்களுக்கு சிறுகடன் வழங்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுக்களாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு ''சிறுகடன்'' வழங்கப்படுகிறது. ஒரு சுய உதவித் குழுவில் அதிகபட்சமாக 20 உறுப்பினர்கள் இருக்கலாம். இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.50,000/- கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் கடன்களுக்கு 4% வட்டி வசூலிக்கப்படுகிறது. கடன் தொகையை 3 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

4. **<u>சிறு கடன் திட்டம்</u>**

இத்திட்டத்தின் கீழ் ஆண்கள் சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள் தனியாக அல்லது குழுக்களாக சிறு தொழில்/வணிகம் செய்வதற்கு சிறுகடன் வழங்கப்படுகிறது. ஒரு சுய உதவிக் குழுவில் அதிகபட்சமாக 20 உறுப்பினர்கள் இருக்கலாம். இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.50,000/- கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் கடன்களுக்கு 5% வட்டி வசூலிக்கப்படுகிறது. கடன் தொகையை 3 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

5. **<u>போக்குவரத்து இனங்களுக்கான காலக் கடன்</u>**

கார்/ வேன் மற்றும் மினிவேன், டிராக்டர்/டிரெய்லர் (விவசாய தொழிலுக்கு) போன்ற போக்குவரத்து இனங்களுக்கு அதிகபட்சமாக ரூ.3.13 இலட்சம் கடனுதவி வழங்கப்படுகிறது.

இவ்வாறு வழங்கப்படும் கடன்களுக்கு 10% வட்டி வசூலிக்கப்படுகிறது. கடன் தொகையை 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

6. <u>பயனாளியின் தகுதிகள்:</u>

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினராக இருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறமாயின் ரூ.98,000/- மற்றும் நகர்புறமாயின் ரூ.1,20,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 60 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். . ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும். சுய உதவி குழு தொடங்கி 6 மாதங்கள் பூர்த்தியாகியிருக்க வேண்டும். திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) அவர்களால் தரம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

7. <u>கடன் அளவு</u>

தனி நபர் கடன் அதிகபட்சமாக ரூ.10,00,000/- வரை கடனுதவி வழங்கப்படுகிறது. மகளிருக்கான புதிய பொற்கால கடன் திட்டத்தின் கீழ் ரூ.1,00,000/- வரை கடனுதவி வழங்கப்படுகிறது. கறவைமாடுகள் வாங்க ரூ.60,000/- வரை கடனுதவி வழங்கப்படுகிறது. வாகனங்கள் வாங்கிட ரூ.3,13,000/- வரை கடனுதவி வழங்கப்படுகிறது. சுய உதவி குழுவிற்கு ஒரு நபருக்கு ரூ.50,000/- என அதிகபட்சமாக ரூ.10,00,000/- வரை கடனுதவி வழங்கப்படுகிறது.

8. <u>வட்டி விகிதம்</u>

தனி நபர் கடனுக்கு ஆண்டிற்கு 6% வட்டி வசூலிக்கப்படுகிறது. மகளிருக்கான புதிய பொற்கால திட்டத்திற்கு ஆண்டிற்கு 5% வட்டி வசூலிக்கப்படுகிறது. மகளிர் சுய உதவி குழுவிற்கு ஆண்டிற்கு 4% வட்டி வசூலிக்கப்படுகிறது. ஆடவர் சுய உதவி உதவி குழுவிற்கு ஆண்டிற்கு 5% வட்டி வசூலிக்கப்படுகிறது. கறவை மாடுகள் கடனுக்கு ஆண்டிற்கு 6% வட்டி வசூலிக்கப்படுகிறது. வாகன கடனுக்கு ஆண்டிற்கு 10% வட்டி வசூலிக்கப்படுகிறது.

<u>விண்ணப்பிக்கும் முறை</u>

கடன் விண்ணப்ப படிவங்கள் பின்வரும் அலுவலகங்களிலிருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

அ) விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அலுவலகம், விழுப்புரம், பெருந்திட்ட வளாகத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் அலுவலகங்கள், விழுப்புரம் சென்னை மெயின் ரோட்டில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி/ அந்தந்த நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் அந்தந்த பகுதியிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆகிய இடங்களில் விண்ணப்பதாரர்கள் கடன் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து கீழ்க்காணும் ஆவண நகல்களுடன் மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் ஏதேனும் ஒன்றில் ஒப்படைக்க வேண்டும்.

- சாதி, வருமானம் மற்றும் இருப்பிட சான்றிதழ்
- குடும்ப அட்டை
- திட்ட அறிக்கை
- சம்மந்தப்பட்ட வங்கி கோரும் இதர ஆவணங்கள்

*டாப்செட்கோ கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற தகுதியுள்ளவர்கள் 30.06.2016க்குள் மேற்கண்ட அலுவலகங்களில் விண்ணப்பித்து பயனடைய வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.*

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.